பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 80

வெள்ளிக்கிழமை
14 பெப்ரவரி 2025

மாசி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## வடக்கு கிழக்கில் அபிவிருத்தி!

யாழ்ப்பாணம், பெப். 14
2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும் அபிவிருத்திப் பணிகளை 11

# காற்றாலை மின்திட்டங்களை கைவிட்டது அதானி குழுமம்



கொழும்பு, பெப்ரவரி 14
இலங்கையில் முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்த காற்றாலை மின்திட்டத்திலிருந்து விலகுவதாக இந்தியாவின் அதானி குழுமம் அறிவித்துள்ளது. 11



மூத்த ஊடகவியலாளர்

## இராஜநாயகம் பாரதியின் புகழுடல் தீயில் சங்கமம்

யாழ்ப்பாணம், பெப். 14
மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் புகழுடல் பிரமுகர்கள், பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் அஞ்சலியைத் தொடர்ந்து 11

கொழும்பு உயர்நீதிமன்றில்

## யாழ். பல்கலைத் துணைவேந்தருக்கு எதிராக அடிப்படை உரிமைமீறல் மனு

யாழ்ப்பாணம், பெப். 14
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தரால் விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடைக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக் கழக 4ஆம் வருட சட்டத் துறை மாணவன் சி.சிவகஜன் என்பவரால் 11

## திஸ்ஸ விகாரைக்குத் தீர்வுகாண இராணுவத்துடன் பேச்சுவார்த்தை

பௌத்தசாசன அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 14
யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்குத் தீர்வு காண்பதற்காக, இராணுவத்துடனும் தொடர்புடைய அமைச்சுகளுடனும் விரைவில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாக பௌத்த சாசன அமைச்சு அறிவித்துள்ளது.
இந்த விடயம் தொடர்பில் பௌத்தசாசன அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி. அத்தப்பத்து மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் - 11

## கஜேந்திரகுமார் எம்.பி.யை முடக்க பொலிஸ் முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 14
யாழ்ப்பாணம் தையிட்டி விகாரையை இடித்தழிக்க வருமாறு, சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட போலித் தகவல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர 10



## பிரதமர் நாளை யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், பெப். 14
பிரதமர் ஹரிணி அமரசூரிய யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகைதரவுள்ளார்.
நாளை காலை கோப்பாய் கலாசாலையில் இடம்பெறும் நிகழ்வில் கலந்துகொள் 11

## தமிழரசுக் கட்சி வழக்கு: அடுத்த தவணை ஜூனில்

நேற்றும் காரசார விவாதம்

திருகோணமலை, பெப். 14
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில், எதிராளிகள் தரப்பில் இருவேறு கருத்துகள் ஏற்பட்டதாலும், எதிராளிகளில் ஒருவரான தமிழரசுக் கட்சியின் மூத்ததலைவர் மாவை சேனாதிராஜாவுக்குப் பதிலாக வேறொருவரை மாற்றம் செய்வதா என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காகவும் ஜூன் மாதத்துக்கு வழக்குத் திகதியிடப்பட்டுள்ளது. 10

## நுரைச்சோலை மின்கட்டமைப்பு மீள இயக்கம்!

கொழும்பு, பெப். 14
நுரைச்சோலை நிலக்கரி மின்நிலையத்தில் செயலிழந்த மூன்று மின்னுற்பத்திக் கட்டமைப்புகளும் மீள இயங்க ஆரம்பித்துள்ளன.
இந்தமின்கட்டமைப்புகள் பொறியியலாளர்களின் கண்காணிப்பில் 12

ஊடகர் லசந்த படுகொலை சந்தேகநபர்கள் விவகாரம்

## சட்டமா அதிபர் குத்துக்கரணம்!

முன்னைய பரிந்துரை ரத்து

கொழும்பு, பெப். 14
ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களை விடுவிக்குமாறு கோரி, குற்றப் புலனாய்வுத் 12




‘அப்போ அம்பானியையே வம்பு வேண்டாமெண்டு ஓடவைச்சாச்சு எண்டு சொல்லுங்கோ’

## சித்திரைப் புத்தாண்டின் பின்னரே தேர்தல் அறிவிப்பை வெளியிடுக

தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, பெப். 14
தமிழ், சிங்கள புத்தாண்டு முடிவடைந்த பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எதிரணிகள் கோரிக்கை விடுத்துள்ளன.
தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் 13க்கும் மேற்பட்ட கட்சிகளின் இணக்கக் கடிதமும் தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
உள்ளாட்சி 11



## செம்மணிக்கு அருகாக மனித எச்சங்கள் மீட்பு

10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 13.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3988 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 01 16 32 58 |
| விசேட எழுத்து | U |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 13.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1015 |
| வெற்றி இலக்கினம் | மேடம் |
| வெற்றி இலக்கங்கள் | 5 25 37 38 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 13.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 014 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 7 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 13.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2094 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 09 |
| வெற்றி இலக்கங்கள் | 07 09 39 57 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 13.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5746 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 5 9 7 0 1 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 13.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1776 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 03 47 63 64 |
| விசேட எழுத்து | B |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 13.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 321 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 7 0 1 8 |

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் | |
| 13.02.2025 | வியாழக்கிழமை | 0454 | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | | |
| R | 7 2 5 5 1 4 | | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 13.02.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2720 | D | 04 42 47 64 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 13.02.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 13 27 35 50 | 4881 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 13.02.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0621 | 08 22 48 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 13.02.2025 | வியாழக்கிழமை | |
| விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ® | 24 26 30 44 | 4432 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 13.02.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 32 | 05 30 34 47 | 1896 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 13.02.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 05 22 49 57 | 2546 |

# ஒரு நாட்டுக்குள் வாழ தமிழ் மக்கள் தயாராம்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.14**

**தமிழ் மக்களின் அன்பையும், நம்பிக்கையையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பெற்றுள்ளது. ஒரு நாட்டுக்குள் வாழ்வதற்குத் தயார் என அந்த மக்கள் செய்தி வழங்கியுள்ளனர் என்று ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

இணையமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்க்கட்சிகள் பழைய அரசியல் கலாசாரத்திலிருந்து இன்னும் மீண்டுவரவில்லை. அதனால்தான் கூட்டுறவுத் தேர்தலில் வென்றால்கூட பட்டாசு கொளுத்திக் கொண்டாட்டங்களில் ஈடுபடுகின்றனர். அவர்களின் அரசியல் வங்குரோத்து நிலையை அது வெளிப்படுத்துகின்றது. நாம் அவ்வாறு செயற்படப்போவதில்லை. மக்கள் விரும்பும் மாற்றமே எமது நோக்கம்.

தேசிய சமத்துவத்தை ஏற்படுத்தி இலங்கையர்களாக சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் செயற்பட்டுவருகின்றோம். அதனால் எதிரணிகள் கலக்கமடைந்துள்ளன. இனவாதத்தை ஒருபுறம் வைத்துவிட்டு வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மக்கள் ஒரு கட்சிக்கு வாக்களித்துள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தோழர் அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது அந்த மக்களின் அன்பும், நம்பிக்கையும் கிடைக்கப் பெற்றது.

எமக்குத் தெரிந்த வரலாற்றில் வடக்கு மக்கள் தேசியக் கொடியுடன் இம்முறை சுதந்திரத் தினத்தைக் கொண்டாடினார்கள். கிழக்கிலும் அவ்வாறு நடந்துள்ளது. ஒரு நாட்டுக்குள் வாழ்வதற்குத் தயார் என அம்மக்கள் செய்தி வழங்கியுள்ளனர். இது பெரும் வெற்றியாகும். மக்களின் நம்பிக்கையை ஒருபோதும் விலைகொடுத்து வாங்க முடியாது- என்றார். (ஏ-44)



# குரங்குகளைப் பிடித்து நாடுகடத்தும் திட்டம்

## ஆரம்பித்தது அரசாங்கம்

கொழும்பு, பெப்.14

குரங்குகளைப் பிடிக்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிடிக்கப்படும் குரங்குகளை ஒரு தீவுக்குக் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு தீவு அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் பரீட்சார்த்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பரீட்சார்த்தத் திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ணவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குரங்குகளால் பயிர்ச்செய்கைக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது என்று தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது - என்றார். (ஏ-இ)

# சுகாதார, ஊடக அமைச்சுகளில் அதிகளவு பதவி வெற்றிடங்கள்!

கொழும்பு, பெப்.14

பொதுச்சேவையில் தற்போதுள்ள வெற்றிடங்களில் சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சுக்களில் அதிக வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த இரு அமைச்சுக்களிலும் 3 ஆயிரத்து 519 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதற்கு அடுத்தபடியாக பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் 3 ஆயிரம் வெற்றிடங்கள் உள்ளன. அமைச்சுகள், மாகாண சபைகளில் காணப்படும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 456 என்று அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# பேருந்தில் யாழ். வந்தார் பிரதி அமைச்சர் பிரதீப்!

யாழ்ப்பாணம், பெப். 14

பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் துறையின் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், நேற்றுப் பேருந்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார்.

பிரதி அமைச்சராக இருந்தும் அவர் மிகவும் எளிமையாக பேருந்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்தமையை பலரும் சமூக வலைத்தளங்களில் பாராட்டி வருகின்றனர்.

'பிரதி அமைச்சராக இருந்தாலும்கூட யாழ்ப்பாணத்துக்கு இலங்கை ஆசிரிய சேவை சங்கத்தின் பணிகளுக்காக அதன் பிரதிநிதியாகவே வருகை தந்தேன். ஆதலால்தான் நான் தனிப்பட்ட வாகனத்தில் வராமல், பேருந்தில் வருகை தந்தேன்' - என்றார். (ம-26)

# அரகலய வன்முறைகளில் ஆளும் தரப்பே தீவைத்தது

கொழும்பு, பெப். 14

அரகலய வன்முறையின்போது ஆளும் தரப்பினரே எமது வீடுகளுக்குத் தீவைத்தனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மே 9 வன்முறையின்போது (அரகலய) ஆளும் தரப்பினரே எங்களின் வீடுகளுக்குத் தீவைத்தனர். வீட்டைப் புனரமைப்பதற்காகவும், சொத்துக்களுக்கு ஏற்பட்ட அழிவுக்காகவும் நாங்கள் இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டோம். எனது வீட்டைப் புனரமைப்பதற்காக நான் 54 மில்லியன் ரூபாவை இழப்பீடாகப் பெற்றுக்கொண்டேன். இதில் யாருக்கு என்ன பிரச்சினை?

இன்று இழப்பீட்டுத்தொகை தொடர்பில் பேசுபவர்கள், தாம் தான் வீடுகளுக்குத் தீவைத்தவர்கள் என்பதை மறந்துவிட்டுப் பேசுகின்றனர். இழப்பீட்டுத்தொகை தொடர்பில் இன்று கருத்துக்களை வெளியிடும் ஆளும் தரப்பினர், எமது வீடுகளுக்கு தீவைத்தவர்களின் பெயர் விவரங்களையும் பகிரங்கப்படுத்த வேண்டும். அதை அவர்களால் செய்யமுடியுமா? - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதி விளைச்சல் அரசாங்கத்துக்கு

## சட்டம் உருவாக்கத் திட்டம்



**கொழும்பு, பெப்.14**

**உரமானியம் பெற்றுக்கொள்ளும் விவசாயிகளின் விளைச்சலில் பாதியை அரசாங்கத்துக்கு விற்பனை செய்வதைக் கட்டாயமாக்கும் சட்டவரைவொன்று உருவாக்கப்படவுள்ளது என்று அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.**

அவ்வாறான சட்டம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்று பல்வேறு தரப்புகளிடமிருந்தும் கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேவேளை, அரசாங்கம் நிர்ணயித்துள்ள நெல் கொள்வனவு விலை போதுமானது என்று வடமத்திய விவசாயிகள் அமைப்பு தெரிவித்துள்ளது. நெல் கொள்வனவு நிர்ணய விலை போதுமானதாக இல்லை என்று நாட்டின் ஏனைய பிரதேச விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில், வடமத்திய விவசாயிகள் அமைப்பு இவ்வாறு அறிவித்துள்ளது. (எ-இ)

# காதலர் தினத்தில் குற்றச்செயல்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,பெப்.14

காதலர் தினம் என்ற போர்வையில் இடம்பெறும் பல்வேறு குற்றச்செயல்கள் குறித்து மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தத்தினத்தை வர்த்தகர்களும் போதைப்பொருள் கடத்தல்காரர்களும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.

எனவே குற்றச் செயல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கவும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# எயார்லைன்ஸில் 'ஏ.ஐ.' தொழில்நுட்பம்

கொழும்பு,பெப்.14

வாடிக்கையாளர்களின் கேள்விகளுக்கு விரைவாகப் பதிலளிக்க, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 'யானா' என்ற செயற்கை நுண்ணறிவுச் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

www.srilankan.com என்ற இணையதளத்தில் உள்நுழைந்து இந்த வசதியைப் பெறுமாறு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தனது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துள்ளது.

வலைத்தளத்தின் வலது பக்கத்தில் விமானப் பணிப்பெண்ணின் படம் காட்டப்படும். அந்தப் படத்தைக் கிளிக் செய்வதன் மூலம் கேள்விகளை இயக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## முதலீட்டுத் தொடர்புகளுக்கு

# ஐக்கிய அரபு இராச்சியத்துடன் இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு,பெப்.14

பொருளாதார, முதலீட்டுத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இலங்கைக்கு இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

உலக அரச உச்சி மாநாட்டையொட்டி அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மேற்கொண்டிருந்த மூன்று நாள் விஜயத்துடன் இணைந்ததாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த இருதரப்பு ஒப்பந்தத்தினூடாக இலங்கைக்குள் வர்த்தக மற்றும் வணிக வேலைத்திட்டங்களை வலுப்படுத்துவதுடன் வெளிப்படைத்தன்மையான மற்றும் நிலையான முதலீட்டுச் சூழலை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

# நாமல் நிதிமோசடி; அடுத்தகட்ட நகர்வு



கொழும்பு,பெப்.14

நிதிமோசடிக் குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட சந்தேகநபர்கள் குழுவுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத்துறை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

அதன்படி, வழக்கை ஓகஸ்ட் 7 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட நீதவான், அந்தத் திகதியில் சட்டமா அதிபரின் ஆலோசனையை நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)




**போட்டுக்குடுக்கிறதும் நல்லகாரியங்களை நாசமாக்கிறதும் சிலருக்கு முழுநேரப் பொழுதுபோக்கு. உந்தக் கோதாரிவிழுந்த போன் வரமுதல் மொட்டைக் கடிதங்கள் மூலம் தங்களுக்குப் பிடிக்காதவையைப் பற்றி மேலிடங்களுக்கும், சொந்தக்காரருக்கும் இல்லாதது பொல்லாததெல்லாம் எழுதினாத்தான் சிலருக்குப் பத்தியப்படும். இப்ப கடிதங்கள் எழுதிற வழக்கொழிஞ்சுபோய்க்கொண்டிருக்கிறதாலையும், நினைச்ச உடன ஆரோடயும் கதைக்கக்கூடியமாதிரி போன் வசதியள் வந்ததாலையும் மொட்டைக்கடிதங்களுக்குப் பதிலா, மொட்டைப் போன் கோல்களிலையே சிலர் தங்கட பொச்சத்தைத் தீர்த்துக்கொள்ளத் தொடங்கிட்டினம். இந்தக் கிழமை இப்பிடியொரு மொட்டைப் போன் கோலால தென்மராட்சியில நாலைஞ்சு பள்ளிக்கூடங்களில விளையாட்டுப் போட்டியை வைக்கிறதா, இல்லையா எண்ட குழப்பமே வந்திட்டுதாம்.**

**இண்டைக்கு பெப்ரவரி 14. காதலர் தினம். கூடுதலா லவ்வர்ஸ்மார் இந்த நாளில சந்திக்கிறது, கதைக்கிறது, பிடிச்ச பொருள்களை வாங்கிக்குடுக்கிறது எண்டு காதலர்தினத்தை பகிரங்கமாவோ இல்லாட்டி ஒளிச்சுமறைச்சோ கொண்டாடுவினம். இது உலகத்துக்கே தெரியும். இப்பிடிப்பட்ட நிலையில இப்பதான் பள்ளிக்கூடங்களில விளையாட்டுப்போட்டியள் நடக்கத்தொடங்கியிருக்கு. தென்மராட்சியில அப்பிடிச் சில பள்ளிக்கூடங்கள், இண்டைக்கு (பெப்ரவரி- 14) தங்கட விளையாட்டுப்போட்டியை வைக்க நாள் குறிச்சு, அழைப்பிதழ் எல்லாம் அடிச்சு அனுப்பிட்டினம். இதைக் கேள்விப்பட்ட சிலருக்குப் பொறுக்கமுடியேலை. "அதெப்பிடி லவ்வர்ஸ் டேயில விளையாட்டுப்போட்டியை வைக்கலாம்?"எண்டு உந்தக் கலாசார காவலர்கள் ரண்டுபேர் பொங்கியெழுந்து, தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளருக்கு கோலெடுத்திருக்கினம்.**

**நாங்கள் பள்ளிக்கூடப் பழையமாணவர்கள். லவ்வர்ஸ்டேயில ஸ்போர்ட்ஸ்மீட் வைக்கினமாம்? என்னெண்டு நீங்கள் அனுமதி குடுத்தனியள்? பள்ளிக்கூடம் போறதெண்டிட்டு உந்தப் பெடிபெட்டையள் வேற எங்கையும் போனா ஆர் பொறுப்பு? இல்லாட்டி அங்கால விளையாட்டுப்போட்டி நடக்கேக்க இதுகள் இஞ்சால ஐஸ்கிறீம் , கன்டோஸ் எண்டு வாங்கிக்குடுத்து பள்ளிக்கூடங்களின்ர பேரையே நாறடிச்சுப் போடுங்கள். இதெல்லாம் விடக்கூடாது. நீங்கள்தான் லவ்வர்ஸ்டேயில விளையாட்டுப் போட்டியள் நடக்காமல் தடுக்கோணும். இல்லாட்டி அதால வாற பிரச்சினையளுக்கு நீங்கள்தான் பொறுப்புச் சொல்லோணும்" எண்டு ஏதோ மூண்டாம் உலகப்போரை தடுக்கோணும் எண்ட கணக்கில கதைச்சிருக்கினம். இதைக் கேட்டதும் கல்விப்பணிப்பாளருக்கும் என்ன செய்யிறதெண்டு தெரியேலை. "சிலவேளை இதைத் தடுக்காட்டி தெய்வக்குற்றம் ஆகிடுமோ?" எண்டு அவர் இவையின்ர கதையைக் கேட்டு பதறித் துடிச்சுக்கொண்டு, எந்தெந்தப் பள்ளிக்கூடங்கள் இண்டைக்கு விளையாட்டுப் போட்டி வைக்கினமோ அந்தப் பள்ளிக்கூட அதிபர்மாருக்கு கோல் எடுத்திருக்கிறார். " காதலர் தினத்தில விளையாட்டுப் போட்டி வைச்சால் பிள்ளையள் இஞ்ச வாறமெண்டிட்டு வேற இடங்களுக்கு போய் சிக்கல் வந்தால் என்ன செய்வீங்கள் எண்டு போனில ஒரேகரைச்சல். என்ன செய்ய? இப்பிடிப் பிரச்சினையள் வராம நடத்தலாம் தானே. எதுக்கும் அலேர்ட்டா இருங்கோ" எண்டு அவைக்கு அட்வைஸ் சொல்லியிருக்கிறார் கல்விப்பணிப்பாளர். "இல்லைசேர், அப்பிடியொண்டும் வராது. இது ஆரோ பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டியைக் குழப்போணும் எண்டு இப்பிடி போன்ல சொல்லியிருக்கினம்" எண்டு அதிபர்மார் சொல்லியிருக்கினம். அதோட இண்டைக்கு விளையாட்டுப்போட்டியை நல்லபடியா நடத்திக்காட்டுவம் எண்டும் அவை சொல்லியிருக்கினம்.**

**கிட்டடியில இதில ஒரு பள்ளிக்கூடக்காரர் சிரமதானம் செய்ய வெண்டு வெளிக்கிட, இதேமாதிரி சிலர் மொட்டைப் போன் எடுத்துக் கதைச்சு அந்த சிரமதானத்தையே குழப்பினவையாம். சிரமதானத்தில வெந்த அவையின்ர பருப்பு,விளையாட்டுப் போட்டியில வேகாமல் போட்டுது பாருங்கோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். பணம் வந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**சிம்மம்:** பரபரப்பான நாள். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகக்கூடும். மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் நாள். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக் கூடும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

**விருச்சிகம் :** பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக் கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக் கூடும். செலவு செய்யவேண்டி வரும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**கும்பம்:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும்.



## சமூகப்பணியாளர் சோதிநாயகிக்கு 'அன்பே சிவம்' விருது

யாழ்ப்பாணம், பெப்.14

அகில இலங்கை சைவமகாசபைத் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு நடத்திய 'அன்பே சிவம்' நிகழ்வும் அறநெறி ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வும் அகில இலங்கை சைவமகா சபையின் தலைவர் நா.சண்முகரட்ணம் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் கலந்துகொண்டார்.

இதன்போது அறப்பணிகள் பல ஆற்றிவரும் கு.சோதிநாயகி 'அன்பே சிவம்' விருது வழங்கிக்கௌரவிக்கப்பட்டார். (ச-41-66)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.14

சுழிபுரம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் 12ஆம் திகதி காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலயப் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளார். (ச-41)



புங்குடுதீவு அமெரிக்க மிஷன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 'தூய இலங்கை' செயற்றிட்டத்தின் கீழ் சிரமதான நிகழ்வும், மரநடுகை நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. (ச-9)

## கிரிக்கெட்தொடர்

சாவகச்சேரி, பெப்.14

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட எல்லைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான கிரிக்கெட்தொடர் மட்டுவில் மோகனதாஸ் மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.


யாழ். மாவட்ட எல்லைக்குட்பட்ட 9 உள்ளூராட்சி மன்றங்கள் இந்தத் தொடரில் பங்குபற்றவுள்ளன. (ச-41-28)

## கால்நடைகளை கட்டிவளர்க்கவும்

யாழ்ப்பாணம்,பெப்.14

கோப்பாய், நீர்வேலி ஆகிய பிரதேசங்களில் உள்ள வயல்களில் நெல் அறுவடை இடம்பெற்றுவருகின்றது. அதனையடுத்து மக்கள் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அவிழ்த்துவிட வேண்டாமென கமக்கார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

அறுவடை இடம்பெற்று முடிந்த வயல்களில் கால்நடைகளை வளர்ப்போர் தமது வளர்ப்புக் கால்நடைகளை கட்டிவளர்க்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (ச-33-17)



## அம்பாறைக்கு புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், பெப்.14

இ.போ.ச. யாழ். சாலையால் அம்பாறைக்கு புதிய பேருந்து சேவையொன்று இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்து சேவை காங்கேசன்துறையிலிருந்து இரவு 10 மணிக்கு ஆரம்பமாகி யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்து பின்னர் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தி லிருந்து அம்பாறைக்கு இரவு 11.45மணிக்கு சேவையை ஆரம்பிக்கும் என்று இ.போ.ச சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச-41)

## கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு நிதி

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புகள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்பு நிதி வழங்கும் நடவடிக்கையை கலாசாரப்பேரவை மேற்கொண்டுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் பண்பாட்டு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் ஊடாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு தரமதிப்பீட்டுக்குழுவின் தீர்மானத்துக்கு அமைய கலைஞர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

எனவே தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். பிரதேச செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

புதிய தீர்வுகளை எட்டவில்லை என்றால்,
கண்டிப்பாக புதிய தீமைகளை எதிர்கொள்ள வேண்டும்.


– பிரான்சிஸ் பெக்கான்–

# சங்கிலித் தொடராகும் மோசடிகள்

வெளிநாட்டுப் பயண முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்களால் கோடிக்கணக்கில் பணம் மோசடி செய்யப்படும் சம்பவங்கள் அண்மைய காலங்களில் வடக்கில் அதிகரித்திருக்கின்றன. இளைஞர்களிடம் உள்ள வெளிநாட்டு ஆசையைப் பயன்படுத்தி நூதனமான முறையில் பல லட்சங்களில் இருந்து கோடி ரூபா வரையில் மோசடி செய்யப்படும் சம்பவங்கள் ஊடகங்களில் வெளிவந்தாலும், தொடர்ந்தும் இந்த மோசடி வலைக்குள் அநேகர் சிக்கிக்கொண்டே இருக்கின்றனர். கடந்த வாரத்தில்கூட, வெளிநாடு அனுப்புவதாகத் தெரிவித்து வங்கிக்கணக்கில் இருந்த 80 லட்சம் ரூபா பணம் கையாடப்பட்ட சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடந்திருக்கின்றது. முன்னைய காலங்களிலும் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பும் முகவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றும் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் இப்போது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பல லட்சங்களை வங்கிக் கணக்குகளில் இருந்து உருவிக்கொள்ளும் மோசடிச் சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன. இந்த மோசடியாளர்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் விளம்பரப்படுத்தி தமக்கான வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்கின்றனர். வெளிநாடு செல்லும் ஆசையில் உள்ள இளையோர்கள் சமூக வலைத்தளங்களில் விரிக்கப்படும் இந்த வலைகளில் சுலபமாகச் சிக்கிக்கொள்கின்றனர்.

சமீபகாலத்தில் நடைபெறும் இவ்வாறான மோசடிகளில் பணத்தை யாரிடம் பறிகொடுத்தோம் என்பதே பலருக்குத் தெரியவில்லை. தொலைபேசி அழைப்புகளின் மூலமே பரிச்சயமானவர்கள், காரியம் முடிந்ததும் தொடர்பை அறுத்துக்கொள்வதால் இந்த மோசடிகளின் சூத்திரதாரிகளை இனங்காண்பது கடினமாகவே இருக்கின்றது. இந்த மோசடிகள் பற்றிப் பொலிஸார் அறிவுரைகள் வழங்கினாலும், எச்சரித்தாலும் இந்த மோசடியில் சிக்குவோரின் எண்ணிக்கை குறைவதாக இல்லை. சொல்லப்போனால் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டேதான் இருக்கின்றது. மோசடியாளர்களிடம் பணத்தைக் பறிகொடுத்த பின்னர் பொலிஸாரிடம் ஓடுவது எந்தத் தீர்வையும் தந்துவிடாது. அதேபோன்று பொலிஸாரின் நடவடிக்கைகளில் குற்றங்காண்பதும் ஏற்புடையதல்ல. இந்தச் சம்பவங்களின் விசாரணைகளில் ஒரு சிலர் கைது செய்யப்பட்டாலும் மோசடியின் சூத்திரதாரியைக் கண்டறிவது கடினமாகவே இருக்கின்றது. தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இவ்வாறான மோசடிகளை உடனடியாகத் துப்புத்துலக்குவதும் கடினம். இந்த மோசடிச் சங்கிலித்தொடரை கண்டறிவதற்கும் காலம் எடுக்கும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் சமீப காலத்தில் கோடிக்கணக்கான பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டிருக்கின்றது. இவற்றைத் தவிர பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யாமல்- வெளித்தெரியாத மோசடிச் சம்பவங்களின் எண்ணிக்கையும், அவற்றால் பறிகொடுத்த பணமும் இன்னும் பலமடங்கு அதிகமாகவே இருக்கும். பொதுமக்கள் விழிப்போடு இருப்பதுதான் இந்த மோசடிகளில் இருந்து தப்பிப்பதற்கான ஒரே வழி. வெளிநாட்டுப் பயண முகவர் என்று எவரேனும் அறிமுகமானால் அவர்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சமூக வலைத்தளங்களில் வெளியாகும் விளம்பரங்களை நம்பி, முகம் தெரியாதவரிடம் தொடர்புகளை ஏற்படுத்துவதையும், ஆவணங்களைக் கையளிப்பதையும் தவிர்ப்பதே சிறந்தது. முன்னெச்சரிக்கையுடனும், விழிப்புணர்வுடனும் செயற்படுவதன் மூலமே இந்த மோசடி வலைகளில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும். இல்லாவிட்டால் இந்த மோசடிகள் சங்கிலித் தொடராக நீண்டுகொண்டே இருக்கும்.



# இலங்கை மாணவர்களுக்கு இந்தியப் புலமைப்பரிசில்கள்



கொழும்பு,பெப்.14
கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முழுமையான அனுசரனையுடன் வழங்கப்படும் 200க்கும் அதிகமான புலமைப் பரிசில்களுக்கு பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
மருத்துவம்/துணைமருத்துவம், நவநாகரிக வடிவமைப்பு, மற்றும் சட்டத்துறை சார்ந்த கற்கைகள் தவிர்ந்த பல்வேறு துறைகளில் இந்திய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வியைக் கற்பதற்காக இந்தப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பாக தேவையான தகவல்களைக் கல்வி அமைச்சின் www.mohe.gov.lk எனும் இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். இந்தக் கற்கைநெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவு செய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும்மாணவர்கள் இலங்கை கல்வி அமைச்சு அல்லது கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஆகியவற்றை அணுகி தகவல்களைப் பெற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஏப்ரல்வரை உஷ்ணம்


கொழும்பு,பெப்.14
நாட்டில் தற்போது நிலவும் வெப்பமான காலநிலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரை தொடரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
அதிகாலைவேளையில் நிலவும் குளிரான காலநிலையும் தொடரக்கூடும். அத்துடன், நாட்டின் சில பகுதிகளில் இடைக்கிடையே சிறியளவில் மழைவீழ்ச்சி பதிவாகினாலும், வெப்பமான காலநிலை தொடரும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 23 கிலோ போதைப்பொருள் சிகிரியாவில் மீட்பு

கொழும்பு,பெப்.14
சிகிரியாவில் 23 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.
சிகிரியாப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் இந்த போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ரூபா உயர்வு

கொழும்பு,பெப்.14
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் உயர்வடைந்துள்ளது. இதன்படி, இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணமாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 292.61 ரூபாவாகவும் விற்பனைப் பெறுமதி 301.19 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ச-இ)



## வெளியேறும் மருத்துவர்கள்

கொழும்பு,பெப்.14
2 ஆயிரம் மருத்துவர்கள் ஏற்கனவே சுகாதார சேவைகளை விட்டு வெளியேறிவிட்டனர் என்பதுடன், மேலும் 5 ஆயிரம் பேர் நாட்டைவிட்டு வெளியேற உள்ளனர் என்று அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
மருந்து விநியோகஸ்தர்கள் பற்றாக்குறையால் பல சிக்கல்கள் ஏற்படக் கூடும் என்றும் அந்தச் சங்கத்தின் மருத்துவர் சமில் விஜேசிறி தெரிவித்துள்ளார். நாட்டில் உள்ள மருத்துவ ஊழியர்கள் பாதுகாக்கப்படவேண்டும், அரசாங்கம் குறுகியகாலத் தீர்வுகளைச் செயற்படுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)



நாள்காட்டி
சனிக்கிழமை - மாசி - 03
15.02.2025
சுபநேரம் : 03.33 - 05.03
ராகுகாலம் : 09.33 - 11.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலை இடிக்க முடியுமென்றால் விகாரையை ஏன் அகற்றமுடியாது?

## சிறீதரன் எம்.பி. கேள்வி

**யாழ்ப்பாணம், பெப்.14**

**சட்டத்தின் பிரகாரம் இந்துக் கோயிலை இடிக்கமுடியும் என்றால் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரையை ஏன் இடிக்க முடியாது? என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.**

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றவேண்டும் என்று வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தம்புள்ளவில் 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த காளி கோயில் சட்டத்துக்குப் புறம்பானது என்று கூறி பௌத்த பிக்குகளின் வேண்டுகோளுக்கு இணங்க இரவோடு இரவாக இடித்து அழிக்கப்பட்டது. இந்துக் கோயிலை இடிக்கமுடியும் என்றால், போரின் பின்னர் கடந்த 7 ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட சட்டவிரோத விகாரையை ஏன் இடிக்கமுடியாது என்ற கேள்வியையே நாம் கேட்கின்றோம்.

விகாரைக்குரிய காணியில் விகாரை கட்டப்பட்டிருந்தால் யாரும் அதைப்பற்றிக் கேட்கப் போவதில்லை. ஆனால் விகாரை கட்டப்பட்டுள்ள நிலம் தமிழர்களின் காணி. எமது பூர்வீக நிலம். விகாரையை மையப்படுத்தி 14 ஏக்கருக்கு மேற்பட்ட காணியை கபளீகரம் செய்ய முயற்சிப்பது பெரும் அராஜகம்.

தமிழர் தாயகத்தின் பல இடங்களில் விகாரைகள் அமைக்கப்படுவது தமிழர்களின் நிலங்களைப் பறித்தெடுப்பதற்கான முயற்சிகள்தான். அரசாங்கம் இதற்கு நீதியான, நியாயமான தீர்வை வழங்க முன்வரவேண்டும். அரசாங்கம் தீர்வை வழங்காவிட்டால் எதிர்காலத்திலும் போராட்டம் தொடரும் - என்றார். (ஏ-125)



# போதையில் நின்றவர் பேருந்துகள் மீது அட்டகாசம்

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி,பெப்.14

கிளிநொச்சி அக்கரையான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆடைத்தொழிற்சாலைப் பணியாளர்களை ஏற்றிவந்த பேருந்து மீது வீதியில் மதுபோதையில் நின்ற ஒருவரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடந்துள்ளது.

இதன்போது பேருந்தின் கண்ணாடி உடைக்கப்பட்டதுடன் சாரதி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கிளிநொச்சியிலிருந்து வந்த பயணிகள் தனியார் பேருந்தொன்றின் மீதும் குறித்த நபரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த சாரதிகள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குறித்த சந்தேகநபரை கைதுசெய்துடன் மேலதிக விசாரணைகளையும் அக்கரையான் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-33-113)



# தெல்லிப்பழையில் கூட்டுறவு மருத்துவமனை சேவை நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.14

தெல்லிப்பழை கூட்டுறவு மருத்துவமனையின் சேவை நிலையம் ஒன்று யாழ். மருத்துவமனை வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் என். வேதநாயகத்தால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். திருலிங்கநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சந்திரசேகரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-33,17)

# ஊடகத்துறையில் ஓயாது சுடர்விட்டுப்பிரகாசித்தவர்

## ஊடகவியலாளர் பாரதி மறைவுக்கு வடமராட்சி ஊடக இல்லம் இரங்கல்!

யாழ்ப்பாணம், பெப். 14

ஊடகத்துறையில் தடம் பதித்து முதல் இறுதிவரை சுமார் நான்கு தசாப்தங்கள் தமிழ்த்தேச விடுதலைக் கனவு சுமந்தவராக ஊடகத்துறையில் ஓயாது சுடர்விட்டுப் பிரகாசித்தவர் பாரதி அண்ணா. அவரின் மறைவு ஊடகத்துறையில் இட்டு நிரப்பமுடியாத பேரிழப்பாகும் என்று யாழ். வடமராட்சி ஊடக இல்லம் இரங்கல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் வெளியிட்ட இரங்கல் அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் மூத்த ஆசிரியர்களில் ஒருவராக விளங்கிவந்த பாரதி இராஜநாயகம். அவரது எழுத்துகள் அரசியல் மற்றும் சமூகத்துக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்திருந்தன. அவரின் மறைவு ஊடகத்துறையில் இட்டு நிரப்பமுடியாத வெற்றிடமாகும்- என்றுள்ளது. (ச-25,100)

# நெல் களஞ்சியசாலைகள் பதிவு செய்வது கட்டாயம்!

கிளிநொச்சி,பெப்.14

அனைத்து நெல் களஞ்சிய உரிமையாளர்கள் மற்றும் அரைக்கும் ஆலை உரிமையாளர்கள் அனைவரும் நெல் சந்தைப்படுத்தல் சபையில் பதிவை மேற்கொள்வது கட்டாயம் என்று கிளிநொச்சி நெல் சந்தைப்படுத்தல் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதுவரை பதிவுசெய்யப்படாதவர்களுக்காக ஒரு மாத காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே வழங்கப்பட்டுள்ள ஒரு மாதகாலத்துக்குள் பதிவு செய்யப்படாத அனைத்து நெல் களஞ்சியசாலை உரிமையாளர்கள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் மீதும் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-33)

# கொடுப்பனவு விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.14

'அஸ்வெசும' பயனாளிகளுக்கான பெப்ரவரி மாத கொடுப்பனவு அந்தந்த வங்கிகளில் நேற்றுத் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்று நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. (ச-9)

பூநகரிப் பிரதேச செயலக சமூக பணிக்குழுவின் மூன்றாவது களவிஜயம் செட்டியகுறிச்சி கிராம அலுவலர் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு, சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் சந்திப்பு, ஓய்வூதியத் திட்டம் மற்றும் உற்பத்தித்திறன் தொடர்பான கருத்துகள் வழங்குதல் என்பன இடம்பெற்றன. (ச-25,9)



# ஊடகப் பணிகளுக்கூடாக சமூகத்தை முன்னிறுத்தியவர்

## பாரதிக்கு கருவி நிறுவனம் இரங்கல்

யாழ்ப்பாணம், பெப்.14

ஊடகப் பணிகளுக்கூடாக சமூகத்தை முன்னிறுத்த முடியுமென வாழ்ந்து காட்டியவர் பாரதி இராஜநாயகம் என மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையமான கருவி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பிலேயே அந்த நிறுவனம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்குக் கருவி நிறுவனம் ஆற்றுகின்ற பணிகளை ஊடகங்களினூடாகவே தான் இணைந்து மேற்கொள்ளவேண்டும் என்ற விருப்பில் 2017 ஆம் ஆண்டு கருவி நிறுவனத்தின் மாற்றுத்திறனாளிகள் தினக் கொண்டாட்ட நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார். அதன் தொடர்ச்சியாகக் கருவி நிறுவனத்தில் தன்னை ஓர் அங்கத்தவராக இணைத்துக் கொண்டதுடன் பல வளவாளர்களை இணைத்துக் கொண்டார். தான் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் எமது சமூக மாற்றத்துக்காக உழைத்த ஆத்மா இன்று மௌனித்திருக்கின்றது.

நெஞ்சு கனக்கும் நினைவலைகளோடு அவருக்கு விடைகொடுக்க வேண்டியிருக்கின்றது என்று இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன நீதித்துறையில் அரசியல் தலையீடுகள்

## வெற்றியளிக்காதென நாமல் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.14
சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அழுத்தம் பிரயோகித்து அதனைக் கையகப்படுத்துவதற்குரிய அரசாங்கத்தின் முயற்சி வெற்றியளிக்காது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதித்துறை என்பன சுயாதீனமாக இயங்கவேண்டும். இவற்றில் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது. எனினும், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அழுத்தம் பிரயோகித்துத் தமக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் எவ்வளவு முயற்சித்தாலும் அதனை எமது நாட்டில் செய்யமுடியாது.
அதேபோல சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரத்தை அரசியல் அதிகார மேசையொன்றின்கீழ் கொண்டு வருவதற்குரிய முயற்சியும் இடம்பெறுகின்றது. இதுவும் வெற்றியளிக்காது என்றும் குறிப்பிட்டார். (ச-44)

# கொக்குவில் ஐயப்பனில் தைப்பூசவிழா இன்று

தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்ட கொக்குவில் கிழக்கு ஐயப்பன் ஆலயத்தின் 25 ஆவது தைப்பூச விழா இன்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.
இன்று முற்பகல்10 மணியளவில் சிறப்பு அபிஷேக வழிபாடுகள் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று மதியம் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுமென ஆலயத்தின் தர்மகர்த்தா எஸ்.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார். (ச-66)


## புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

புங்குடுதீவு- நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கிளைகளுக்கான 31.12.2023ம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்டுள்ள வாக்களிக்கத்தகுதியுடைய வாக்காளர்களின் பெயர் விபரம் அடங்கிய வாக்காளர் பட்டியல் இயங்குகின்ற கிளைகளிலும் இயங்காத கிளைகளின் பட்டியல் சங்கத் தலைமைக் காரியாலயத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 1. | கிளை இலக்கம் 01 ஊரதீவு | தலைமைக்காரியாலயம் |
| 2. | கிளை இலக்கம் 02 மடத்துவெளி | தலைமைக்காரியாலயம் |
| 3. | கிளை இலக்கம் 03 மாவுதிடல் | தலைமைக்காரியாலயம் |
| 4. | கிளை இலக்கம் 05 தல்லைப்பற்று | தலைமைக்காரியாலயம் |
| 5. | கிளை இலக்கம் 06 தல்லைப்பற்று தெற்கு | தலைமைக்காரியாலயம் |
| 6. | கிளை இலக்கம் 07 மண்காடு | தலைமைக்காரியாலயம் |
| 7. | கிளை இலக்கம் 09 புங்குடுதீவு மத்தி | கூட்டுறவு நகர் |
| 8. | கிளை இலக்கம் 10 பெருங்காடு | கூட்டுறவு நகர் |
| 9. | கிளை இலக்கம் 12 பெருங்காடு தெற்கு | தலைமைக்காரியாலயம் |
| 10. | கிளை இலக்கம் 13 குறிகாட்டுவான் | தலைமைக்காரியாலயம் |
| 11. | கிளை இலக்கம் 14 கணேசா | தலைமைக்காரியாலயம் |
| 12. | கிளை இலக்கம் 15 இறுப்பிட்டி | தலைமைக்காரியாலயம் |
| 13. | கிளை இலக்கம் 16 அரியநாயகம்புலம் | தலைமைக்காரியாலயம் |
| 14. | கிளை இலக்கம் 18 நயினாதீவு மத்தி | கிளை இல-20திலும் |
| 15. | கிளை இலக்கம் 19 நயினாதீவு தெற்கு | கிளை இல-20திலும் |
| 16. | கிளை இலக்கம் 20 நயினாதீவு வடக்கு | கிளை இல-20திலும் |

இப்பட்டியல் 14.02.2025ம் திகதியில் இருந்து 28.02.2025 வரை மேற்குறிப்பிட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் மேற்படி வாக்காளர் பட்டியல் தொடர்பான திருத்தங்கள் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் சங்கச்செயலாளருக்கு எழுத்து மூலம் 02.03.2025ம் திகதிக்கு முன்னர் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்
புங்-நயி பல நோக்குக்கூட்டுறவுச்சங்கம்

(CS 44117) V1


# ராஜபக்சவின் வீட்டைக்கொளுத்தி விரட்டுவதற்கு அரசு எத்தனிப்பு

## கூறுகிறார் தொலவத்த

கொழும்பு, பெப்.14
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தங்கியுள்ள வீட்டைக்கொளுத்தி, அவரை அங்கிருந்து வெளியேற்றுவதற்குரிய சூழ்ச்சி இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்துள்ளார்.
மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ள அரசாங்க வதிவிடத்தை ஆட்சியாளர்களால் சட்டபூர்வமாக மீளப்பெற முடியாது. எனவே, மக்கள் சென்று கடிதங்களை கையளிக்கவேண்டும் என ஆளுங்கட்சி சொல்கின்றது.
குறித்த வீட்டை சுற்றிவளைத்து, சட்டத்தை கையிலெடுத்து, போராட்டம் நடத்தி முன்னரைப்போன்றே வீட்டைக் கொளுத்தி மஹிந்த ராஜபக்சவை வெளியேற்றுவதற்கு சூழ்ச்சி நடக்கின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.
எனவேதான் கடிதம் அனுப்புமாறு மக்கள் தூண்டப்படுகின்றனர். சட்டபூர்வமாக மஹிந்தவை வெளியேற்றமுடியாது என்பதால்தான் இப்படிச் சிந்திக்கின்றனர். எனவே, மக்களைத் தூண்டிவிட்டு சட்டம், ஒழுங்கை சீர்குலைக்கவேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-44)



# நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.14
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சிநிலையத்தால் இலவசமாக நடத்தப்படுகின்ற கலை வகுப்புகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
ஆரம்ப நிகழ்வில் கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள், கந்தர்மடம் வேதாந்தமட ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்தின் எட்டாவது குருபீடாதிபதி ஸ்ரீ வேதவித்யாசாகரர் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் பாலசண்முகன் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்
இதில் பேச்சாளர் பயிற்சி, நடனம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், சிலம்பம் முதலான கலைகளில் தேர்ச்சிபெற்ற வளவாளர்களால் இலவசமாகப் பயிற்றுவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை
## 01.03.2025 தொடக்கம் 31.12.2025 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு புலோப்பளை ஆட்டிறைச்சிக்கடையை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்வி அறிவித்தல் 2025

ஏலக்கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 14.02.2025 - 27.02.2025 பி.ப 2.00 மணி வரை
ஏலக்கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 27.02.2025 பிற்பகல் 2.00 மணி
ஏலக் கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 27.02.2025 பிற்பகல் 2.00 மணி
ஏலக் கேள்வி நடைபெறும் இடம் :- தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) |
|---|---|---|---|
| புலோப்பளை உபஅலுவலகம் | | | |
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | 44,665.40 | 5,000.00 |

நிபந்தனைகள்

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02 ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமைஅலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணத்தினை 27.02.2025 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும்.
03. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் ஏலத்தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்பு பணத்தை செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவேண்டும். பாதுகாப்பு வைப்புப்பணத்தை உடனடியாக செலுத்த தவறும்பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகைக்கு வழங்கப்படும்.
04. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை மாதாந்தம் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படவேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
05. சித்திகர ஏலதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
06. ஏலக்கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
07. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

த.தர்சினி.
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை. 14.02.2025

(CR/44318) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றிநவிலலும்



தோற்றம் 12.12.1933 — மறைவு 28.01.2025

கடந்த 28.01.2025 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் Dr.கந்தையா சபாரட்ணம்

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி, வலைத்தளங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்த உறவுகளுக்கும், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் வெளியிட்ட நல் உள்ளங்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாக கலந்துகொண்ட சகல அன்பர்களுக்கும் எமது துன்பத்தில் பங்குகொண்ட அனைத்து உறவுகளுக்கும் மனமார்ந்த எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (14.02.2025) வெள்ளிக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் (சட்டநாதர் கோவில் அருகாமையில்) நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதத்தோடு வருகை தந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**

98, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(cs 56513) (N-1)

குடும்பத்தினர்

## பொது அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை

**தரம் பிரிக்கப்பட்ட உக்கக்கூடிய கழிவுகளை கையளித்தல்**

சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுகளில் தரம் பிரிக்கப்பட்ட, உக்கக்கூடிய கழிவுகளினை பயிர்ச்செய்கை நிலங்களுக்கு அல்லது தாழ்வான நிலப்பகுதியினை நிரவுவதற்கு பொதுமக்கள் கோருமிடத்து இலவசமாக வழங்குவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பயனுறுதியான தேவைப் பாட்டினையுடைய பொதுமக்கள் நேரடியாகவோ அல்லது 021 222 2700 எனும் தொலைபேசி இலக்கத்தி னூடாகவோ தொடர்பு கொள்ள முடியும்.

செயலாளர்
நல்லூர் பிரதேசசபை. (CR/44317) J-1 14.02.2025

## பொது அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை

**படவரைஞராக பதிவு செய்தல் புதுப்பித்தல் - 2025 காலநீடிப்பு**

சபையினால் 18.12.2024 ம் திகதிய உதயன் மற்றும் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட படவரைஞர் பதிவு செய்தல் புதுப்பித்தலுக்கான காலம் 28.02.2025 திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

NVQ நிலை 5ல் தொழில்நுட்ப (கட்டடம்) (Drafting technology Building NVQ Level - 05) கற்கை நெறியினை பூர்த்தி செய்த மற்றும் குறித்த கற்கை நெறியினை தொடர்ந்து கொண்டிருக்கும் விண்ணப்பதாரர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க முடியும்.

செயலாளர்
நல்லூர் பிரதேசசபை. (CR/44316) J-1 14.02.2025

## ப்ரியசாத் பிணையில்

கொழும்பு, பெப்.14

சமூகச் செயற்பாட்டாளர் டான் ப்ரியசாத் என அழைக்கப்படும் அபேரத்ன லிய னகே சுரேஷ் ப்ரியசாத் என்பவரை பிணையில் விடுவிக்குமாறு கோரி கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## வேலையற்ற பட்டதாரிகள் யாழில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 14

வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணத் தில் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ள தாக அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக காலை 9 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. (ம)

**பணியாளர் தேவை**

எமது "கண்பரிசோதனை" நிறுவனத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி கிளைகளுக்கு தூய்மைப் பணியாளர் (சுத்திகரிப்பாளர்) வேலைக்கு ஆண்/ பெண் இருபாலாரும் தேவை. ஊதியமாக தினமும்
யாழ்ப்பாணம்-ரூபா 1300/- வீதம் 26 நாள் வேலைக்கு ரூ33 800/-
கிளிநொச்சி-ரூபா 1100/- வீதம் 26 நாள் வேலைக்கு ரூ28600/- மாதாந்தம் வழங்கப்படும்.

விஷன் கெயர் (VISION CARE)
108, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: 07580800, 077 767 6095

**நாஹா மருத்துவ நிலையம்**

நீரிழிவுப் பாதிப்பினால் வரும் கைகால் விறைப்பு, பாரிசவாதம், முள்ளந்தண்டுப் பாதிப்பு, முழங்கால்வாதம், அல்சர் : சிறப்பு மருந்தியல்

T.P.: 077 321 2740

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

## 8ம் ஆண்டு நினைவஞ்சலியும் 22 வது பிறந்தநாள் நினைவும்

### அமரர் தவத்துரை ஹரிஷன்

(தரம் -8 மாணவன் சென்ஜோன்ஸ் கல்லூரி)





ஆண்டுகள் எட்டு உருண்டோடி மறைந்தாலும்
ஆற முடியவில்லையடா எம்மால் உன் இழப்பை
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
புன் சிரிப்பின் பிறப்பிடமாய்
வாழ்ந்த எங்கள் அன்பு ஹரிஷ் குட்டியே
புன்னகையோடு நீ உலாவி வந்த
இடமெல்லாம் வெற்றிடமாய்
இருப்பதை எம்மால் இன்னும்தான்
தாங்க முடியவில்லை
அல்லும் பகலும் உன் நினைவு
எம்மை வாட்டி வதைக்கிறதே
கணமுன்னே நீர் வாழ்ந்தகாலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உம் திருவதனம்
எந்நாளும் வந்து நிற்கிறதே
மணவிட்டு மறைந்து - நீர்
அவசரமாய் அற்ப ஆயுளில்
விண்நோக்கி சென்றுவிட்டாலும்
கண் விட்டு மறையாமல்
எம்மோடு வாழ்ந்து கொண்டே இருக்கிறீ



**என்றும் உன் நினைவில் வாடும்**

**அப்பா, அம்மா, அன்புத்தங்கை, மாமாமார், பெரியப்பா, பெரியம்மாமார், அக்காமார், மச்சான்மார், அண்ணா, மச்சாள், மருமக்களான - ரஸ்வினா, சயன், அனுஷாலி, பெறாமகள் - கிரிஷ்னி.**

மண்ணில் 14.02.2003 — விண்ணில் 03.03.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 02 . 1964



மறைவு 13 . 02 . 2025

## அமரர்.செல்வமலர் சிவகுமாரன்

இணுவில் மேற்கு கோவில்வாசலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர்.செல்வமலர் சிவகுமாரன் அவர்கள் நேற்று (13.02.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா சிவகுமார் (கணேசன் சென்றர் உரிமையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் கதிர்காமநாயகி தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான துரைராசா அன்னம்மா தம்பதியரின் மருமகளும் சிந்துயா (பிரதேசசெயலகம் யாழ்ப்பாணம்) சிவகாசிக்கா (Quantity Surveyor) ஆகியோரின் அன்புப் தாயாரும் ரகுநாதன் (STR Conctodion உரிமையாளர்). பிரதீபன் (DFCC Bank). ஜெயகுமரன் (நோர்வே). ஜெயகலா (கனடா). ஸ்ரீகலைவாணி (திருகோணமலை). தனகேசவன் (லண்டன்). பிரசாந்தி (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகராஜா (சிவசக்தி -வவுனியா). காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி. சிவநாதன் ஆகியோரின் அன்பு மருமகளும் கருணைத்தவசோதியின் பெறாமகளும் நந்தினி (நோர்வோ). காலஞ்சென்ற யோகதாஸ். கணேசகுமார் (துறைமுக அதிகாரசபை-திருகோணமலை). பிரதீபா (லண்டன்). சரபாஸ்கரன் (யா/மானிப்பாய் இந்து மகளீர் கல்லூரி). காலஞ்சென்ற சிவராஜா மற்றும் சின்னராசா. அருட்செல்வி ஆகியோரின் மைத்துனியும் லோகநாயகி. கமலாம்பிகை ஆகியோரின் சகலியும் யதுர்சன். ஜனகன். அஸ்வின். அவ்யா ஆகியோரின் பெரியம்மாவும் ஞானலோகினி. கோகுலன். இராகுலன் (Dr). கோபிதன். சர்மிலன் (Dr). பிரதீபன். சிவரூபன். நிதேஷன் ஆகியோரின் சிறியதாயும். யகதுர்க்ஷா. தீப்தன். ஷாடுகேசி. ஆரங்கன். சஹானா. நிறஞ்சலா. லக்டியானி ஆகியோரின் அத்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

K.K.S. வீதி,
இணுவில் வைத்தியசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 07 . 1937



மறைவு 13 . 02 . 2025

## பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம்

வேலணை மேற்கு வண்ணாம்புலத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை வடக்கு சோளாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (13.02.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மார்க்கண்டு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சுவீகரன். காலஞ்சென்றவர்களான விஸ்ணுகரன். மதியழகன் மற்றும் பாரதா. உதயழகன். காலஞ்சென்ற முகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமணிதேவி. கௌரியம்பிகை. சண்முகதாஸ். ராகினி. சிவாஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பார்வதிப்பிள்ளை.காலஞ்சென்ற இரத்தினாம்பாள் ஆகியோரின் மைத்துனரும் நிஷாந்தன். விஷ்னுகா-துவிச்சன் (அவுஸ்ரேலியா). விஸ்ணுப்பிரியா-லுக்ஷன். சாத்விகா-மேஷாக். வேணுப்பிரியா-தெய்வீகன் (கனடா). திவ்வியா. ரஜிகரன். கஜனிகா. சரணியா-பிருந்தன். ஜினோசன். டிலக்சன். சுவீசன். கபிசாந். கபிநாத். லதாங்கி. தேனுஸ்ஷா. தஷானா. ரிஷானா ஆகியோரின் அன்புப் பாட்டனும். அகரவ். அக்ஷேவ். அக்ஷேத்ரா. தாரகி. தருணிகன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை வடக்கு சோளாவத்தை வீரம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வேலணை வடக்கு-05
சோளாவத்தை.

தகவல்:
குடும்பத்தினர்
077 149 9094

## நகுலேஸ்வரருக்கு கொடியேற்றம்





வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று வியாழக்கிழமை அடியவர்களின் அரோகராக் கோஷங்களுக்கு மத்தியில் கொடியேற்றத் துடன் ஆரம்பமானது. (ச-66,27)

# மூத்த ஊடகவியலாளர் பாரதிக்கு இயக்குநர் கௌதமன் இரங்கல்!

சென்னை. பெப்.14

மறைந்த மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகத்துடன் இனம். ஈழத்தின் சிக்கல்கள் சார்ந்து பல முறை பேசிய நினைவுகள் வந்து நிழலாடி மனம் வேதனைக்குள்ளாகின்றது என்று தமிழக இயக்குநரும் தமிழ்ப் பேரரசுக் கட்சியின் பொதுச்செயலாளருமான வ.கௌதமன் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூத்த பத்திரிகையாளர் ஐயா பாரதிக்கு எனது ஆழ்ந்த இரங்கலும் கண்ணீர் அஞ்சலியும்.

தமிழ்நாடு அம்பத்தூரில் அவரை ஒருமுறை நேரில் சந்தித்துப் பேசிய நிகழ்வும் இனம் சார்ந்தும் ஈழத்தின் சிக்கல்கள் சார்ந்தும் பலமுறை பேசியதும் வந்து வந்து நிழலாடி மனம் வேதனைக்கு உள்ளாகிறது.

ஈழத்தின் பாலும் தமிழினத்தின் பாலும் அடங்காப் பற்று கொண்டு அறத்தோடு இயங்கிய ஐயா பாரதிக்கு மீண்டும் அழியாப் புகழ் வணக்கத்தை என் சார்பிலும் எனது தமிழ்ப் பேரரசுக் கட்சியின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்- என்றுள்ளது. (எ-இ)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 31.07.1937 மறைவு 13.02.2025

அமரர்

### பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம்

நாரந்தனை சரவணை கர்னர் தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபை உறுப்பினர் பாலசுப்பிரமணியம் உதயழகன் அவர்களின் தந்தையின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை
14.02.2025 இராஜ கோபுர திருப்பணிச்சபை

(CS 2520)V-1

## காணி விற்பனை

சாவகச்சேரி நுணாவில் ஐயர் வீதியில்
2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- A9 வீதியிலிருந்து 200m தூரத்திலும்
- சாவகச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து 2 Km தூரத்திலும் அமைந்துள்ளது.

077 695 0693

(CS/57505) J-1

## இலங்கை மின்சாரசபை
## உத்துறு ஜனனி மின்னிலைய வளாகத்தினை சுத்திகரிப்புக்கான சேவை சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள்

இலங்கை மின்சாரசபை உத்துறு ஜனனி மின்னிலையத்திற்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் பி.ப 3.00 மணி வரை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான பொறியியலாளர்.
யாழ் ஒளி மின்நிலையம்,
இலங்கை மின்சார சபை.
சுன்னாகம்.
தொ.பே.இல. 021 224 2247/8

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.10600
Telephone No.0112 423 897

01. கேள்விப்பத்திர பெறுமதி (Price of the Bid Document) - ரூபா. 2000.00
02. கேள்விப்பத்திர பிணை வைப்பு (Value of Bid Bond) - ரூபா. 50000.00

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No.0112 423897

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 05/03/2024 மு.ப 10.00 மணிக்கு Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa. என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜேந்திரகுமார்...

குமார் பொன்னம்பலத்துக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி, அவரது செயற்பாடுகளை முடக்குவதற்கு பொலிஸ் மட்டத்தில் கடும் முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - தையிட்டிப் பகுதியில் பொதுமக்களின் காணியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை அகற்றப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார். ஜனாதிபதி அநுரவின் தலைமையில் ஜனவரி மாதம் 31ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் அவர் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதையடுத்து, தையிட்டி விகாரையை இடிப்பதற்கு ஒன்றுபடுமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொதுமக்களை அழைப்பது போன்று ஒரு துண்டுப்பிரசுரம் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டது. அந்தத் துண்டுப்பிரசுரத்துக்கும் தனக்கும் தொடர்பில்லை என்றும், அது போலியானது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் உடனடியாகவே தெளிவுபடுத்தலை வழங்கியிருந்தார்.

எனினும், இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்து அவருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளனர். இதன்படி, இன்று காலை 9 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நீதிமன்றத்தில் முன்னிலையாகவுள்ள நிலையில், அதற்குப் பின்னர் வாக்குமூலம் பெறுவதற்காக காலை 10 மணியளவில் பலாலி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். இதனால், அவரை முடக்குவதற்காகவும், அச்சுறுத்துவதற்காகவுமே பொலிஸார் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பலரும் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-26)

## செம்மணிக்கு...

யாழ்ப்பாணம் செம்மணிக்கு அருகாக, சந்தேகத்துக்கு இடமான வகையில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அரியாலை சிந்துபாத்தி மயானத்தில் மின்தகன எரியூட்டி அமைப்பதற்காக ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர்கள் கட்டுமானப் பணிகளுக்காக நேற்றுமுன்தினம் நிலத்தைத் தோண்டியபோதே, வெறும் ஒன்றரையடி ஆழத்தில் சந்தேகத்துக்கு இடமான வகையில் இந்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில்நல்லூர்ப்பிரதேசசபைக்கு ஒப்பந்தக்காரர்களால் அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வருகைதந்த நல்லூர்ப் பிரதேசசபை செயலாளர், பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர், மயானசபை உறுப்பினர் ஆகியோர் மனித எச்சங்களைப் பார்வையிட்டுள்ளனர். இதையடுத்து, ஒப்பந்தக்காரர்கள் தொடர்ந்தும் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நல்லூர்ப் பிரதேசசபை செயலாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

சிந்துபாத்தி மயானத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தபோது மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இரண்டு எச்சங்களே மீட்கப்பட்டன. நான் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு கூறினேன். எனினும் ஒப்பந்தக்காரர் மறுத்துவிட்டார். மயான அபிவிருத்திச் சபை ஒப்பந்தத்தின் தொடர் பணிகளை மேற்கொள்ளும். இந்த மயானத்தில் கிறிஸ்தவர்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்க வாய்ப்புக்கள் உள்ளன. ஆதலால், இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை - என்றார். (அ-ம-125)

## தமிழரசுக்...

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, சிறீதரன் எம்.பி., குகதாஸன் எம்.பி. மற்றும் முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் ஆகியோரால் வழக்கை முடிவுறுத்துவதற்காக முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதில், 326 உறுப்பினர்களுடன் பொதுக்குழுவைக் கூட்டுவதே பொருத்தமானது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கடும் ஆட்சேபம் தெரிவித்தார்.

'இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கட்சியின் மத்திய குழுவில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டு, ஒரு எதிராளி என்ற வகையில் நீதிமன்றத்துக்கு விவரமாக விடயங்களைச் சமர்ப்பித்துள்ளேன். இவ்வாறிருக்கையில், மேற்படி மூன்று எதிராளிகளும் (சிறீதரன் எம்.பி., குகதாஸன் எம்.பி. மற்றும் முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன்) கட்சிக்குத் தெரியாமல் தம்பாட்டுக்கு ஒரு திட்டத்தைக் கொண்டுவருகின்றனர். மத்தியகுழுத் தீர்மானத்தின்படி 156 உறுப்பினர்களுடன் கட்சியின் மாநாட்டைக் கூட்டுவதற்குத்தான் நான் சம்மதிக்கின்றேன். இவர்கள் இணக்கத்துக்கான வாய்ப்பை வேண்டுமென்றே குழப்பியடிக்கின்றனர்' என்று ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.


கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம் மற்றும் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சயந்தனும், கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் இரத்தினவடிவேலின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியும், ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் கருத்தையே முன்வைத்தனர்.

இந்த இழுபறிகள் காரணமாக வழக்கு ஜூன் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. காலமான மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவுக்குப் பதிலாக வேறொருவரை மாற்றம் செய்வதா என்பது தொடர்பில் அன்றையதினம் தீர்மானிக்கப்படவுள்ளது. அந்த விடயம் தொடர்பில் தீர்மானிக்கப்பட்ட பின்னரே வழக்கின் அடுத்தடுத்த விடயங்கள் தொடர்பில் தெரியவரும்.

இதேவேளை, ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் குறிப்பிடுவது போன்று, பொதுச்சபையை 156 பேருடன் கூட்டுவது என்பது தொடர்பில் மத்தியகுழுக் கூட்டங்களில் தீர்மானிக்கவில்லை என்று மத்திய குழு உறுப்பினர்கள் சிலர் உதயனுக்கு உறுதிப்படுத்தினார்கள். (அ-ம-26)

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை ஸ்ரீகேசவன்



பிறப்பு
14.06.1967

இறப்பு
12.02.2025

பொன்னுத்துரை ஸ்ரீகேசவன் அவர்கள் நேற்று முன்தினம் (12.02.2025) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-பராசக்தி தம்பதியரின் அன்பு புதல்வரும் சிவமலர் அவர்களின் அன்புக்கணவரும், சாயுக்தன், காலஞ்சென்ற ஸ்ரெபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று அளவெட்டி மணற்பிட்டி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்பு :**
**077 676 1963**
**077 418 9542**

தகவல்:
குடும்பத்தினர்
மற்றும் உடன் பிறவா சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர்...

ளும் பிரதமர், அதன் பின்னர் வடமாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

தொடர்ந்து நாளை மாலை ஏழாலை, சுழிபுரம், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் இடம்பெறும் மக்கள் சந்திப்பில் பிரதமர் பங்கெடுக்கவுள்ளார். இதைத் தொடர்ந்தும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் பிரதமர் ஹரிணி செல்லவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-26)

## வடக்கு...

மேற்கொள்வதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. இது தொடர்பான அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும் என்று சமூக உட்கட்டமைப்பு வசதிகள் துறையின் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்திருந்த பிரதி அமைச்சர், ஊடகவியலாளர் சந்திப்பிலும் ஈடுபட்டார். இதன்போது, 'வடமாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிறப்புத் திட்டமிடல்களைக் கொண்டுள்ளதா?' என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான இலக்குகளில் வடக்கு - கிழக்குப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதும் ஒன்றாகும். இன்னும் சிலகாலத்தில் முன்வைக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் இது தொடர்பான அறிவிப்புக்களை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

வடக்கிலும் கிழக்கிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களும், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள மக்களும் அதிகளவில் உள்ளனர். அவர்களின் வாழ்க்கையை அழகாகவும், வளமாகவும் மாற்றுவதை நாங்கள் எங்களின் நோக்கமாகவே கொண்டுள்ளோம் - என்றார். (அ-ம-26)

## இராஜநாயகம்...

தீயுடன் நேற்று சங்கமித்தது. தமிழ் ஊடகப்பரப்பில் 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட மூத்த ஊடகவியலாளர் பாரதி உடல் நலக்குறைவு காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் பாரதியின் புகழுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. நேற்று வியாழக்கிழமை இறுதிக் கிரியைகள் மற்றும் அஞ்சலி உரைகள் இடம்பெற்று நண்பகல் ஒரு மணியளவில் கொக்குவில் இந்துமயானத்துக்கு புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது. (அ-ம-26)

## திஸ்ஸ...

திஸ்ஸ விகாரை விடயம் தேசிய ஐக்கியம் தொடர்பில் உணர்வுபூர்வமானதாகக் காணப்படுகின்றது. இது தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். இராணுவம் தற்போது அந்த ஆலயத்தை நிர்வகித்துவருகின்றது. அத்துடன் அந்த விகாரையில் கட்டுமானப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. பௌத்த மதகுரு ஒருவர் அங்கு தங்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு தன்னால் அதனை தொடர்ந்து நிர்வகிக்கமுடியாது என்றும், பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையைப் பதிவுசெய்யவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆதலால், அரசாங்கம் பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. - என்றார். (அ-ம-இ)

## சித்திரைப்...

சபைத் தேர்தலுக்காக ஏற்கனவே செலுத்தப்பட்ட கட்டுப்பணம் மீளச் செலுத்தப்படவில்லை. இதனால் கட்டுப்பணம் செலுத்துவதற்குகூட நிதி நெருக்கடி உள்ளது. எனவே, கட்டுப்பணத்தை மீளச் செலுத்திய பின்னரே தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவிடம்

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், வரவு - செலவு தொடர்பான நாடாளுமன்றக் கூட்டத்தொடர் 17ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதம்வரை நடைபெறவுள்ளது. இதற்கிடையில் தேர்தல் பிரசாரம் இடம்பெற்றால் அது பெரும் நெருக்கடியாக அமையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோல சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு அமைதியான தொரு சூழ்நிலை இருக்கவேண்டும் எனவும், புத்தாண்டுக்கு இடையில் தேர்தலை நடத்துவது அரச அதிகாரிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் எதிரணிகளால் தேர்தல் ஆணைக்குழுவிடம் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-44)

## யாழ்...

கொழும்பு உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவகஜன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

*கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி பல்கலைக்கழகத் துணைவேந்தரால் சட்டத்துறை மாணவன் சிவகஜனுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது. இந்த வகுப்புத் தடை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடாதி முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய விதிக்கப்பட்டுள்ளது என்று துணைவேந்தரால் மாணவனுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகுப்புத் தடையைச் சவாலுக்குட்படுத்தியே சட்டத்துறை மாணவன் சிவகஜனால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*'தன்மீது பாரதூரமான அவதூறை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்களுக்கு சிவகஜன் செவ்வி வழங்கினார்' என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடாதி துணைவேந்தரிடம் முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாடு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடாதி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்த மறுநாளே வழங்கப்பட்டுள்ளது.*

*இந்த விவகாரத்தில் 9 மாணவர்களுக்கு எதிராக மூன்று வெவ்வேறு சம்பவங்கள் தொடர்பாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், அவை தொடர்பில் முறையான விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் பரிந்துரைகள் ஒழுக்காற்று சபையின் பரிந்துரைக்காக விடப்பட்டபோது, ஒழுக்காற்று சபையின் பரிந்துரைகளை ஏற்காது கலைப்பீடாதிபதியின் வலியுறுத்தலின் அடிப்படையில் அந்த மாணவர்களுக்குத் தண்டனையாக வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*ஒரு சம்பவம் கலைப்பீடத்தில் பாடத்தெரிவில் வெளிப்படையான ஒரு முறைமை கடைப்பிடிக்கப்படவில்லை என்பது தொடர்பில் வட்ஸ்அப் செயலியில் கருத்துத் தெரிவித்த மாணவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். இந்த விடயத்தில் முறைப்படி அமைக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று விசாரணைக் குழு, இரு மாணவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றை வழங்குவது என்று மட்டுமே தீர்மானித்திருந்தது. ஆனால் கலைப்பீடாதிபதியின் வலியுறுத்தலுக்கு அமைய ஒரு வருடத்துக்கு மாணவ நிலையிலிருந்து அவர்களை இடைநிறுத்தும் தண்டனை வழங்கப்பட்டது.*

*இரண்டாவது சம்பவம் விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் தலைவராலும், துணைத்தலைவராலும் மாணவர்கள் தங்கள் வாகனங்களை நிறுத்திவைக்கும் இடத்தில் போடப்பட்ட பூட்டை உடைத்தது தொடர்பானது. பலமுறை கூறியும் அந்தப் பூட்டுத் திறக்கப்படாததால் பூட்டை உடைத்த குற்றச்சாட்டுக்காக அவர்களுக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டிருந்து.*

*மற்றையது பரமேஸ்வரன் ஆலயத்துக்கு அண்மையில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட பதற்ற நிலைமை தொடர்பானது. இந்தவிடயத்தில் முறைப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழு, ஒரு மாணவனுக்கு எதிராக மட்டும் மது போதையில் இருந்தார் என்று தெரிவித்து ஒரு வருடம் மாணவ நிலையில் இருந்து இடைநிறுத்த வேண்டும் என்று முன்மொழிந்திருந்தது. ஆனால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடாதியின் அழுத்தத்தின் அடிப்படையில் ஒழுக்காற்று சபை 5 மாணவர்களுக்கு எதிராகவும் ஒரு வருட இடைநிறுத்தல் தண்டனையை வழங்கியது.*

*இந்த மூன்று விடயங்களும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழ மாணவர் ஒன்றியத்தின் செயலாளராக அண்மைக்காலம் வரை செயலாற்றிய சி.சிவகஜனால் விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டது. அவர் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடாதி தொடர்பாக எவ்விதமான அவதூறான கருத்துக்களையும் முன்வைக்கவில்லை. பல்கலைக்கழக நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட தவறுகள் தொடர்பாக ஒரு சட்ட மாணவனாக, சட்ட வரையறைகளுக்கு உட்பட்டே கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஊடகங்களுக்கு செவ்வி வழங்கியிருந்தார்.*

*யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடாதியால் எடுக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான முடிவுகளை ஏற்கவில்லை என்ற பல்கலைக்கழகப் பேரவையின் முடிவை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடாதி வழங்கிய அழுத்தத்தின்பேரிலும், யாழ். பல்கலைக்கழ ஆசிரியர் சங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தத்தின்பேரிலும் துணைவேந்தர் ஒருதலைப்பட்சமாக மாற்றியுள்ளார்.*

*இந்த விடயங்கள் தொடர்பான உண்மைகளைத் தரவுகளுடன் பேசிய சி.சிவகஜன் என்ற மாணவன் எதிர்வரும் மார்ச் மாதம் இறுதிப் பரீட்சைக்கு தோற்றவுள்ள நிலையில், இறுதியாண்டு விரிவுரைகளில் அவர் பங்குபற்றாதவகையில் வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபம் 946இன் பிரகாரம் காலவரையின்றி ஒருவரை வகுப்புத் தடைக்கு உட்படுத்த முடியாது. வகுப்புத் தடைக்கு உட்படுத்த முன்னர் அந்த மாணவனின் கருத்தைக் கேட்கவேண்டும்போன்ற விடயங்கள் பின்பற்றப்படாது அவசர அவசரமாகக் கலைப்பீடாதிபதியைத் திருப்திப்படுத்துவதற்காக துணைவேந்தரால் வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*பல்கலைக்கழகத் துணைவேந்தரின் செயற்பாடு ஏதேச்சதிகாரமானதும், பக்கச்சார்பானதுமாகும். கலைப்பீடாதிபதியைத் திருப்திப்படுத்துவதற்காகவும், அவர் தனது பதவி விலகலை மீளப்பெற வேண்டும் என்பதற்காகவும் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் உறுப்புரை 12 உப பிரிவு ஐ, 14 உபபிரிவு (அ) ஆகியவற்றில் இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களையும், பல்கலைக்கழகப் பேரவையால் உருவாக்கப்பட்ட துணைவிதிகளை மீறும் செயற்பாடாக இது அமைந்துள்ளது என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மாணவர் ஒழுக்காற்று அதிகாரி போன்றவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த மனு அடுத்தவாரம் சிவகஜனால் கோரப்பட்டுள்ள இடைக்காலக் கட்டளை தொடர்பான விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-26)

## காற்றாலை...

இலங்கையில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் காற்றாலை மின்திட்டங்களை அதானி குழுமம் நடைமுறைப்படுத்தவிருந்தது. பெரும்பாலான விடயங்களில் உரிய அனுமதிகள் வழங்கப்பட்டாலும் சுற்றுச்சுழல் அனுமதி, பொதுமக்களின் எதிர்ப்பு மற்றும் உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவற்றால் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அதானி குழுமம் தொடர்ச்சியாகப் பின்னடைவைச் சந்தித்தது.

அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்ட காற்றாலை ஒப்பந்தத்தில் உரியமுறையில் கேள்விகோரல்கள் மேற்கொள்ளப்படவில்லை என்று கடந்த காலங்களில் குற்றச்சாட்டுக்கள்

முன்வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், அதானி குழுமம் காற்றாலை மின்னுக்கு நிர்ணயிக்கும் விலை சர்வதேச சந்தையை விடவும் அதிகமாகவும், ஏற்க முடியாததாகவும் உள்ளதாக ஜனாதிபதி அநுர தனது இந்தியப் பயணத்தின்போதும் சுட்டிக்காட்டியிருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே, இலங்கையில் முன்னெடுக்கப்படவிருந்த திட்டங்களில் இருந்து 'கௌரவமான முறையில்' வெளியேறுவதாக அதானி குழுமம் அறிவித்துள்ளது.

'இலங்கையின் விடயத்தில் அதானி குழுமம் அர்ப்பணிப்புடனும் ஈடுபாட்டுடனும் உள்ளது. ஆதலால், இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் எதிர்கால ஒத்துழைப்புக்குத் தயாராக உள்ளோம்' என்று தமது விலகல் தொடர்பில் அதானி நிறுவனம் அறிவித்துள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 07 . 1950 — மறைவு 12 . 02 . 2025

## ரவிசாந்தினி மகேந்திரன்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் சுதுமலைச் சந்தி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ரவிசாந்தினி மகேந்திரன் நேற்றுமுன்தினம் (12.02.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - சகுந்தலையம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மகேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், நித்தியநந்தினி, கலாவதி, ரவீந்திரன், சுரேந்திரன், வாசுகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தபோதினி, தர்சினி, லம்போதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கஜரூபன் விநாயகன், சிவஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தனஞ்செயன், அம்ரிதா, சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுதுமலைச் சந்தி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
021 225 5621

(CS/57489) N-1

# மரண அறிவித்தல்



உதயம் 18 . 01 . 1940 — மறைவு 13 . 02 . 2025

## Dr. இளையதம்பி செல்வநாயகம்

(கருணா கிளினிக் சங்கானை)

தெல்லிப்பளை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் தேவாலய வீதி சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட Dr. இ.செல்வநாயகம் அவர்கள் நேற்று (13.02.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி-தங்கமுத்து தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற செல்லப்பா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜினிதேவி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் (கலாஜோதி புத்தகசாலை), இராஜநாயகம் (துர்க்கா மரக்காலை-சண்டிலிப்பாய்) மற்றும் அரியநாயகம் (ஆதுரா கிளினிக்-மட்டக்களப்பு) ஆகியோரின் சகோதரனும் பாலமுரளி (கனடா), பாலகருணா (கருணா அழகுமாடம்-சங்கானை), பாலஜீவன் (வெஸ்ரன் பாமசி-சங்கானை), கலைமகள் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்மிளா (கனடா), விஜிதா (வலி.தென்மேற்கு பிரதேச சபை), ராதிகா (காரைநகர் யாழ்ரன் கல்லூரி), பிரபாகரன் (வலயக்கல்வி அலுவலகம்-மருதனார் மடம்) ஆகியோரின் மாமனாரும் திருவிளங்கம், திருப்பதிதேவி, துரைசிங்கம், கணேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் அருவிகா, கம்சிகா, அன்பிதன், அகரன், கஜேந்திகா, மதுரங்கா, பிரவீனா, சதுர்சிகா, டிசானன், தரணிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 844 9377

### நுரைச்சோலை...

இயக்கப்படும்நிலையில், மின்கட்டமைப்பின் செயற்றிறனை அடிப்படையாக வைத்து இன்று மின்வெட்டுத் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

இலங்கையில் இயங்கி வரும் பிரபல நிறுவனத்திற்கு யாழ் மாவட்டத்திற்கான விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

தொடர்புகளுக்கு:
070 105 0500

**வேலைவாய்ப்பு**

- **ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலையில் ஆங்கில, தமிழ் ஆசிரியர்கள் தேவை.** ( Female)
  நேர்முகத் தேர்வு: 17.02.2025 ம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை நடைபெறும்.
  பழக விரும்புபவர்களுக்கு 03 மாத பயிற்சிகள் வழங்கப்படும்.
- **கணினி நிலைய வேலைவாய்ப்பு** (Female)
  (MS Office, Photoshop, Page Maker, Corel Draw தெரிந்தவர்கள்)
- **அலுவலக உதவியாளர் (ஆண்கள்)**
  (ஆட்டோ, வான் ஓடக்கூடியவர். Licence உள்ளவர்) வேலை ஆரம்பிக்கும் நேரம் காலை 7.00)

நேர்முகத் தேர்வு : 17.02.2025 ம் திகதி மு.ப 11.00 மணி தொடக்கம் ந.ப 12.00 மணி வரை நடைபெறும்.
புத்தூர், திருநெல்வேலி, இணுவில் ஆகிய இடங்களிற்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்

தொடர்புகளுக்கு:- 077 377 0524

(CS/557502) J-1

### சட்டமா...

திணைக்களத்தில் முன்வைத்த பரிந்துரையை ரத்துச் செய்வதாக சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.
லசந்த விக்கிரமதுங்கவின் சாரதி கடத்தப்பட்டமை மற்றும் அவரது குறிப்பேடு காணாமற்போனமை ஆகிய சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக்கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி பரிந்துரை செய்திருந்தார். அந்தப் பரிந்துரையையே தற்காலிகமாக ரத்துச் செய்வதாக சட்டமாஅதிபர்கல்கிஸ நீதவான் நீதிமன்றத்துக்கு கடிதம் மூலம் நேற்று அறிவித்துள்ளார். (அ-ம-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 12 . 1951 — மறைவு 12 . 02 . 2025

## ரவீந்திரன் செபமாலையம்மா (யோனம்மா)

இணுவில் றோட் முதலாம் குறுக்குத்தெரு மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ரவீந்திரன் செபமாலையம்மா (யோனம்மா) நேற்றுமுன்தினம் (12.02.2025) புதன்கிழமை கர்த்தருக்குள் இளைப்பாறுதல் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - ஞானம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற ரவீந்திரனின் மனைவியும், இராசபூபதி (தங்கம்), காலஞ்சென்றவர்களான அருளம்மா (இராசாத்தி), மரியதாஸ் (மகேந்திரம்), அரியரட்ணம் (அரியம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லெபோன் பத்மநாதன் (சாரதி), ஸ்ரெபின் திலீபன் (திலீப் வீடியோ), சலுஜா ஆன்றோஸ் (லண்டன்), சனுஜா அனுஸ்ரின் சர்மிலா வலன்ரின் (எழுதுநர் நீதிவான் நீதிமன்றம்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரி லூசியா, அருளானந்தராசா (லண்டன்), கொலின்ஸ் றுபினன், சிறில் அமலன் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தேவ் அலெக்ஸ் (லண்டன்), யனோஷா (லண்டன்), ஜெறீனா, சானுஜன், டினுஜன், ஹர்ணி, தபுஷா, டிஷானா, யனுஷனா, தனுஸ்ரி, மதுஷாரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.02.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் புதுமடம் கர்த்தர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் வீதி,
1 ம் குறுக்குத்தெரு,
(விலாப்போடை வீதி)
மானிப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்.
077 662 3572, 077 823 6608, 077 666 2903

(CS 57501) N-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 14.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.